### அனைவரையும் அரவணைத்துச் செல்லும்

# ‘திராவிட மாடல்’ அரசு தொடர வேண்டும் என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்!

## ‘நியூஸ் 18’ தொலைக்காட்சிக்கு — கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!




**சென்னை, ஏப்.8 –**

**அனைவரையும் அரவணைத்துச் செல்லும் திராவிட மாடல் ஆட்சி தொடரவேண்டும் என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ‘நியூஸ் 18’ தொலைக்காட்சிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் கூறியுள்ளார்.**

**தி.மு.க. துணைப்பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க, குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. ‘நியூஸ் 18’ தமிழ்நாடு தொலைக்காட்சியின் நெறியாளர் தியாகச் செம்மலுக்கு அளித்த நேர்காணல் வருமாறு:–**

**கேள்வி:** சூறாவளி பரப்புரை செய்து வருகிறீர்கள். ஐந்தாண்டு கால திமுக ஆட்சி முடிந்த நிலையில், உங்களது பரப்புரையின் போது மக்களின், ‘ரெஸ்பான்ஸ்’ எவ்வாறு உள்ளது?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** பரப்புரையில் நமது ஐந்தாண்டு கால ஆட்சியின் சாதனைகளை பேசும்போது எல்லா இடங்களிலும் மக்கள் ஆர்வத்தோடு ரசிக்கிறார்கள், வரவேற்கிறார்கள். மீண்டும் திமுகதான் ஆட்சி அமைக்கும் என்று மக்களே என்னிடம் பேசுகையில் அது மிகப்பெரிய நம்பிக்கையாக இருக்கிறது. இந்த தேர்தலுக்காக முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் வாக்குறுதிகளை மக்கள் ரொம்ப ஆர்வமாக எதிர்பார்க்கிறார்கள்.

### மக்களின் ‘ரெஸ்பான்ஸ்’

**கேள்வி:** திமுகவுக்கு இது மிக முக்கியமான தேர்தல். ஏனென்றால் மீண்டும் திமுக ஆட்சி அமைய வேண்டுமென்ற இலக்கோடு நீங்கள் களத்தில் இருக்கிறீர்கள். இதை திமுகவினர் ஓர் அழுத்தமாக பார்க்கிறார்களா?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** தி.மு.க. நிர்வாகிகள் மீண்டும் திமுகதான் ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கையோடு உற்சாகமாக பணியாற்றி வருகிறோம். நம்பிக்கையோடு ஒருசெயலை செய்யும்போது அது அழுத்தத்தை தருவதில்லை. கிட்டத்தட்ட எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்பே திமுகவினர் தமிழ்நாடு முழுதும் தேர்தல் பணிகளை தொடங்கிவிட்டோம். எஸ்.ஐ.ஆர். செயல்பாடுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்று திமுக நிர்வாகிகள் அனைவருக்கும் பயிற்சி கொடுத்தோம். நம்முடைய வாக்காளர்கள் மட்டுமல்ல, எந்த வாக்காளரும் வாக்குரிமையை இழந்துவிடக் கூடாது என்று நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்தோம். அதனால் தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். பெரிய குழப்பம் எதுவும் இல்லாமல் நடப்பதற்கு திமுகவின் பணி மிகப்பெரிய உறுதுணையாக இருந்தது.

அதைத் தாண்டியும் திமுக நிர்வாகிகள் மக்களை தொடர்ந்து சந்தித்து வந்திருக்கிறோம். அப்போது மக்கள் தரும் வரவேற்பு, மக்கள் எங்களுக்கு தரும் உற்சாகமான நம்பிக்கை எல்லாம் சேர்ந்து திமுகவுக்கு கூடுதல் நம்பிக்கையை தருகிறதே தவிர, எங்களுக்கு எந்த அழுத்தமும் இல்லை.

### சிஸ்டமேடிக் அப்ரோச்!

**கேள்வி:** பாக முகவர்கள் பயிற்சி மாநாடு, இளைஞரணி, மகளிரணி மண்டல மாநாடுகள் என திமுகவிடம் இம்முறை சிஸ்டமேடிக் அப்ரோச் பார்க்க முடிந்தது. மகளிரணி மண்டல மாநாடுகளில் உங்களுடைய அனுபவம் என்ன? அதன் விளைவுகளை பரப்புரையில் உணர்கிறீர்களா?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** வெல்லும் தமிழ் பெண்கள் மாநாடு மட்டுமல்ல... ஒவ்வொரு பகுதியிலும் இருக்கக் கூடிய மகளிரணியினர் தேர்வுசெய்யப்பட்டு அவர்கள் வீடு வீடாக சென்று ஒவ்வொரு குடும்பத்தினரையும் சந்தித்தார்கள். கடந்த ஐந்தாண்டு கால நம் ஆட்சியில் அவர்கள் பெற்ற நலத்திட்டங்கள் என்ன? இன்னும் என்ன வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள் என்றெல்லாம் தெரிந்துகொண்டு அதை கட்சித் தலைமைக்கு தெரியப்படுத்தினார்கள். மேலும் நமது கொள்கைகள் , திட்டங்கள் ஆகியவற்றை வீடு வீடாக சென்று எடுத்துச் சொல்லும் வாய்ப்பையும் மகளிரணியினர் பெற்றார்கள். இதன் மூலம் திமுக மகளிரணியினர் மிகப்பெரிய அளவில் தங்களை பரப்புரையில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது கட்சிக்கு மிகப்பெரிய பலமாக அமைந்துள்ளது.

### மக்களின் கருத்துப்படி தேர்தல் அறிக்கை!

**கேள்வி:** திமுகவின் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் தலைவராக நீங்கள் பணியாற்றினீர்கள். அதில் இந்த எட்டாயிரம் ரூபாய் கூப்பன் இப்போது பெரும் பரபரப்பாக பேசப்படுகிறது. இந்த யோசனை எப்படி உருவானது?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** தேர்தல் அறிக்கை குழு என்பது பல துறை நிபுணர்களை உள்ளடக்கிதான் உருவாக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக மக்களின் கருத்துகளை உள் வாங்கினோம். பல ஊர்களுக்கு சென்று அங்கே இருக்கக் கூடிய மக்களை சந்தித்தோம். பல அசோசியேஷன்களை சந்தித்து அவர்களின் யோசனைகளைப் பெற்றுக் கொண்டோம். மேலும் இ மெயில் வழியாக, வாட்ஸ் அப் வழியாக மக்களின் கருத்துகளைப் பெற்றோம். கிட்டத்தட்ட 80 ஆயிரம் கருத்துகள் திமுகவின் தேர்தல் அறிக்கைக்காக பெறப்பட்டது. நேரடியாக எங்களிடம் அளிக்கப்பட்ட மனுக்கள், மின்னஞ்சல்கள், வாட்ஸ் அப், ஏஐ பிளாட்ஃபார்ம் வழியாக வந்த கருத்துகள் என கிட்டத்தட்ட 80 ஆயிரம் ஆலோசனைகளை நாங்கள் பெற்றோம்.

இதில் எவை நடைமுறைக்கு சாத்தியம் என்பதை ஆராய்ந்தோம். ஏனென்றால் ஒன்றிய அரசின் சட்டங்கள், ரிசர்வ் வங்கியின் நெறிமுறைகள் எல்லாம் எல்லாம் இருக்கின்றன. இவையெல்லாம் இல்லாததுபோலவே சிலர் தேர்தல் வாக்குறுதிகள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மக்களுக்கு நாம் கொடுக்கும் வாக்குறுதிகள் எவ்வித பொய்யும் இல்லாமல் நேர்மையான வாக்குறுதியாக இருக்க வேண்டும், எதை செய்ய முடியுமோ அதை மட்டுமே வாக்குறுதியாக அளிக்க வேண்டும் என முதலமைச்சர் எங்களுக்கு அறிவுரையாக சொல்லியிருந்தார். அதன் அடிப்படையில் எது சாத்தியமோ அதையே மக்களுக்கு வாக்குறுதியாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தோம்.

இது வேண்டும், அது வேண்டும், இதைக் கொடுக்கலாம், அதை கொடுக்கலாம் என மக்களிடம் இருந்து பல எதிர்பார்ப்புகள் வந்திருந்தன. அவற்றைப் பரிசீலித்துதான் இந்த கூப்பன் என்கிற பெஸ்ட் பாசிபிள் சொல்யூஷன் க்கு வந்தோம்.

ஏனென்றால் சிலரின் வீட்டில் ஃபிரிட்ஜ் இருக்கலாம், சிலர் வீட்டில் வாஷிங் மெஷின் இருக்கலாம். அவர்கள் கையில் சாய்ஸை கொடுக்கும்போது இன்னும் பயனுள்ளதாக இருக்கிறது. அவர்களின் பக்கத்திலே இருக்கும் கடைகளில் போய்தான் மக்கள் இதை வாங்கப் போகிறார்கள். அப்போது தமிழ்நாடு முழுதும் பொருளாதாரத்துக்கான பூஸ்டாகவும் இது மாறும்.

**கேள்வி:** 2006 இல் கலைஞர் இலவச தொலைக்காட்சி திட்டத்தைக் கொண்டுவந்தது மிகப்பெரிய பேசுபொருளானது. உங்கள் பரப்புரையிலும் இதைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். இப்போது முதலமைச்சர் இந்த கூப்பன் திட்டத்தை அறிவித்தபோது இலவச டிவி திட்டத்தோடு இதை நீங்கள் தொடர்புபடுத்தி பார்த்தீர்களா?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** நிச்சயமாக. 2006 களில் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் டிவி என்பது மிகப்பெரிய கனவாக இருந்தது. டிவி பார்க்க பக்கத்து வீடுகளுக்கு செல்வது, அவர்கள் இல்லையென்று சொல்லிவிட்டால் அவமானங்களை சந்திக்க வேண்டிய சூழலாகவும் இருந்தது. அப்போது தன் வீட்டுக்கே டிவி வருகிறது என்பது நிறைய பேருக்கு அந்த அவமானங்களில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும் சுயமரியாதை சின்னமாகவும் தலைவர் கலைஞரின் டிவி இருந்தது. செய்தி உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை அறிந்து கொள்ளும் கருவியாக அன்றைக்கு தலைவர் கலைஞர் அளித்த டிவி பயன்பட்டது.

இன்றைக்கு எப்போதுமே சாய்ஸ் என்பது அதாவது சுதந்திரம் என்பதோ உரிமை என்பதோ முக்கியமான ஒன்றாக இருக்கிறது. நமக்கு எது தேவையோ, நம் வேலை பளுவை எதை குறைக்கிறதோ அந்த சாய்ஸ் பெண்களாக இருந்தாலும் யாராக இருந்தாலும் இருக்க வேண்டும். அதுதான் இந்த எட்டாயிரம் ரூபாய் கூப்பனுக்கான அடிப்படை.

### பெண்களுக்கான அதிகாரப்படுத்தும் திட்டம்!

**கேள்வி:** பெண்களுக்கான அதிகாரப்படுத்தும் திட்டமாக நீங்கள் சொன்னாலும், இதை இலவசத் திட்டம் என்ற பொதுப் பார்வைதானே இருக்கிறது?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின், மிக்சி, கிரைண்டர் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் சாதாரண பொருட்களாக இருக்கும் போது அதை இலவசம் என்று பார்க்கலாம். ஆனால் அது என்னுடைய வாழ்க்கையை மாற்றும் என்று இருக்கக் கூடிய சூழலில் அது எனக்கு பெரிய விஷயமாக மாறுகிறது.

ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ துணி துவைத்து அலசி பிழிந்து காய வைக்க நான் கொடுக்கக் கூடிய நேரத்தை எனக்கு பிடித்த ஒரு விஷயத்தை செய்வதற்கோ, அல்லது நான் புதிய விஷயத்தை கற்றுக் கொள்வதற்கோ, என்னை பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொள்வதற்கோ நான் செய்ய முடியுமே? அப்படியென்றால் அது இலவசம் அல்ல... சமூக மாற்றத்துக்கான விஷயம் அது.

யார், எங்கிருந்து இதை இலவசமாக பார்க்கிறார்கள்... யார் இதை சமூக நலத் திட்டமாக, சமூக மாற்றத்துக்கான முதலீடாக பார்க்கிறார்கள் என்பதில் இது வேறுபடுகிறது.

**கேள்வி:** இதை பெண் சமுதாயத்தினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** நிச்சயமாக. உதாரணமாக தூத்துக்குடியில் நடந்த புதுமைப் பெண் திட்ட நிகழ்வில் முதலமைச்சரிடமே ஒரு பெண் கூறினார். ‘எனக்கு கல்லூரி படிக்க வேண்டும் என்ற கனவு இருந்தது. ஆனால் திருமணமாகி குழந்தைகள் பிறந்ததால் கல்லூரிக்கு போக முடியவில்லை. ஆனால் அந்த ஏக்கம் இருந்தது. புதுமைப் பெண் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய், விடியல் பேருந்து பயணம் ஆகியவற்றால் என்னால் கல்லூரிக்கு சென்று நர்சிங் படிக்க முடிந்தது. இன்று நான் நர்சிங் கோர்ஸ் முடித்து வேலைக்கு போகிறேன். இது என் வாழ்க்கையை மாற்றியிருக்கிறது’என்று அந்த பெண் சொல்கிறார். அப்படியென்றால் இந்தத் திட்டங்களை பெண்கள் மிகச் சரியாக உள்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி:** திமுக அறிவித்த திட்டங்களைப் போலவே மற்ற கட்சியினரும் அறிவித்திருக்கிறார்கள். இதனால் திமுக அறிவித்த திட்டங்களின் மீதான கவனம் குறைகிறது என்று கருதுகிறீர்களா?

### அ.தி.மு.க.வின் நிறைவேற்றப்படாத தேர்தல் அறிக்கை!

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** எது அறிவிப்போடு நின்று போகும்... எது நடைமுறைக்கும் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதில் மக்கள் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். ஏனென்றால் அதிமுகவின் முந்தைய தேர்தல் அறிக்கைகள் நிறைவேற்றப்படாததையும், நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் கூட சில மாதங்கள் தான் என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். லேப்டாப் திட்டமே கூட எடப்பாடி பழனிசாமி காலத்தில் நிறுத்தப்பட்டது. அதை நாம் மறுபடியும் கொண்டு வந்திருக்கிறோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் 35 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் அளிக்கப்படும் என முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். இது நிறைவேற்றப்படும் என்று மக்கள் நம்பிக்கையாக இருக்கிறார்கள். மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்.

**கேள்வி:** கலைஞர் நினைவிட விவகாரம் குறித்து தேர்தல் பரப்புரையில் விவாதங்கள் நடக்கின்றன. முதல்வரும் அதுகுறித்து கடும் கோபத்தோடு எடப்பாடி பழனிசாமிக்கு பதில் அளித்தார். அன்றைக்கு திரு ஸ்டாலின் அவர்களோடு நீங்களும் சென்றிருந்தீர்கள். என்ன நடந்தது என உங்களால் சொல்ல முடியுமா?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** தலைவர் கலைஞர் மறைந்த பிறகு அண்ணாவின் நினைவிடத்தின் அருகே தனக்கு ஒரு இடம் வேண்டும் என்பதுதான் அவருடைய பெரிய கனவு. கலைஞரின் மறைவுக்குப் பிறகு அதை கேட்டபோது ஆயிரம் காரணங்களை சொல்லி அதை முடியாது என்றுதான் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி தெரிவித்துக் கொண்டிருந்தார்.

அண்ணன் தளபதி அவர்கள் இதுதான் எங்களுடைய ஒரே ஒரு கோரிக்கை என அன்றைய முதலமைச்சரிடம் உணர்வுபூர்வமாக எடுத்து சொன்ன போது கூட... கொஞ்சம் கூட இரக்கம் இல்லாமல் அரசியல் ரீதியாக மட்டுமே அதை அவர் பார்த்துக் கொண்டிருந்தார். வேறு இடம் தருவதாகவும் அவர் கூறினார்.




நீங்கள் எத்தனை ஏக்கர் இடம் கொடுத்தாலும் அதற்கு ஈடாகாது என நானே கோபப்படுகிற சூழல் இருந்தது. அப்போதும் அண்ணன் தளபதி அவர்கள் பொறுமையாக தான் பேசிக் கொண்டிருந்தார். அதன் பிறகு தான் நீதிமன்றத்தை நாடி தீர்வு பெறக்கூடிய சூழல் உருவானது.

அதில் மிகப்பெரிய மகிழ்ச்சி என்னவென்றால் தலைவர் கலைஞர் வாழ்நாள் முழுவதும் ஒரு போராளியாகவே இருந்தார். மறைவுக்குப் பிறகும் தனக்கான நியாயத்தை போராடி பெற்றார். அதை யாரும் அவருக்கு தரவேண்டியது இல்லாமல் நீதிமன்றத்தை நாடி பெற்றோம். அந்த வகையில் தலைவர் கலைஞர் இறுதி வரை ஒரு போராளியாகவே வெற்றி கண்டார்.

### கலைஞர் – மிகச் சிறந்த தந்தை!

**கேள்வி:** நீங்கள் எப்பொழுதுமே கலைஞரை தலைவர் என்றுதான் இப்போது வரை சொல்கிறீர்கள். முதலமைச்சரும் அவ்வாறே சொல்கிறார். ஒரு தந்தையாக கலைஞர் எப்படிப்பட்டவர்?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** அவர் ஒரு மிகச்சிறந்த தந்தை. அவரிடம் இருந்து நிறைய விஷயங்களை கற்றுக் கொள்ள முடியும். என்னை எடுத்துக் கொண்டீர்கள் என்றால் படிக்கிற பழக்கம் அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டதுதான். என்ன படித்தாலும் என்னிடம் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு தந்தை. பல விஷயங்களை அவரோடு ஆரோக்கியமாக வாதாட முடியும். கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்ல தந்தை. எந்த சூழ்நிலையிலும் தான் இருக்கக்கூடிய இடத்தை கலகலப்பாக, மகிழ்ச்சி ததும்ப வைத்திருக்கக்கூடிய நகைச்சுவை உணர்வு நிரம்பியவர். அவரோடு இருப்பதே அவரோடு நேரம் செலவழிப்பதே ஒரு எக்ஸ்ட்ராடினரி எக்ஸ்பீரியன்ஸ் தான்.

இதையெல்லாம் தாண்டி ஒரு மகளாக அப்பாவிடம் போடக்கூடிய நிறைய சண்டைகளை நான் போட்டிருக்கிறேன். அதற்கும் அவரிடம் இடம் இருந்தது.

முதலமைச்சர் அண்ணன் ஸ்டாலினுக்கு அவரோடு அரசியல் ரீதியாக இன்னும் அதிகமான பயணம் இருந்திருக்கிறது. இன்னும் அதிகமான ஆழமான விஷயங்களை அவரிடம் இருந்து கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு முதலமைச்சர் அவர்களுக்கு இருந்திருக்கிறது.

அப்பாவோடு எனக்கு இலக்கிய ரீதியான உரையாடக் கூடிய வாய்ப்புகள் இருந்தது. அவருடைய அனுபவங்களை என்னிடம் பகிர்ந்து கொள்வார்.

இப்படி எங்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு வகையான அனுபவங்கள் அப்பாவோடு உண்டு. இதையெல்லாம் தாண்டி குடும்பத்தில் இருக்கும் அனைவரோடும், குடும்பமாக நினைத்த கட்சியினரோடும் அன்பை பொழிந்தவர். யாருக்கு உடல்நிலை சரியில்லை என்றாலும் அதற்காக கவலைப்பட்டு எப்படி இருக்காங்க என்று திரும்பத் திரும்ப விசாரித்துக் கொண்டிருக்க கூடிய ஒரு மனிதராகத்தான் எப்போதுமே அவர் இருந்திருக்கிறார்.

### வலிமையான இயக்கம்!

**கேள்வி:** நீங்கள் இது தமிழ்நாட்டுக்கும் என்டிஏவுக்குமான தேர்தல் என்று சொல்கிறீர்கள். பிரதமர், உள்துறை அமைச்சர் உள்ளிட்டோர் திமுக ஆட்சியை அகற்றியே தீருவோம் என்கிறார்கள். களத்தில் வலுவான மோதல் இருக்கிறதா?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** டெல்லியில் இருந்து இங்கே இருக்கும் கட்சிகள் வரை அனைவரும் திராவிட முன்னேற்றக் கழகம் தான் எங்கள் டார்கெட் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நாங்கள் வலிமையான இயக்கமாக அவர்களை அச்சுறுத்தக் கூடிய இயக்கமாக இருக்கிறோம். எந்த இடத்திலும் எங்கள் கொள்கையை நாங்கள் விட்டுக் கொடுக்கவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது.

அதைத் தாண்டி களம் என்பது திமுக கூட்டணிக்கும் அதிமுக கூட்டணிக்கும் இடையிலான ஒன்றுதான். அதிமுக கூட்டணி ஒரு பலம் வாய்ந்த கூட்டணி போல தோன்றினாலும், மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தோடும் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியோடும் இருக்கிறார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

### தமிழ்நாட்டுக்கான கூட்டணி!

**கேள்வி:** எதிர்க்கட்சிகளோ, திமுக வலிமையாக இல்லாததால் தான் இத்தனை கூட்டணி கட்சிகளை சேர்த்துக் கொண்டிருக்கிறது என்று ஒரு குற்றச்சாட்டுகிறார்கள். அதை எப்படி பார்க்கிறீர்கள்?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** உங்களோடு பயணித்த பலர் இன்று எங்களோடு பயணிக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? நீங்கள் வேண்டாம், உங்களோடு இருந்தால் எதிர்காலம் இல்லை, நீங்கள் முன்னெடுத்து இருக்கிற கூட்டணி தமிழ்நாட்டுக்கு நன்மை செய்ய முடியாத கூட்டணி என்பதை புரிந்து கொண்டு தான்... உங்களோடு இருந்த கூட்டணி கட்சிகள் மட்டுமல்ல உங்கள் கட்சியில் இருந்த தலைவர்கள் கூட அங்கிருந்து விலகி எங்களோடு தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் உங்கள் மேல் இருந்த நம்பிக்கை போனதனால் தான்!

அப்படி வருகிறவர்கள் முதலமைச்சர் தளபதியை நம்பி வரும்போது அவர்களையும் இணைத்துக்கொண்டு கூட்டணி உருவாக்கி இருக்கிறோம். ஏனென்றால் இது தமிழ்நாட்டுக்கான கூட்டணி.

**கேள்வி:** ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்ற முழக்கத்தோடு நீங்கள் பரப்புரை செய்து வருகிறீர்கள். திமுக ஆட்சி தொடரும் என்ற நம்பிக்கை ஏற்படுவதற்கு எது முக்கியமான காரணியாக இருக்கிறது என கருதுகிறீர்கள்?

**கனிமொழி கருணாநிதி எம்.பி.:** தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் அதிகரித்துள்ளன, வளர்ச்சியை நோக்கிய பொருளாதாரமாக தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த ஐந்தாண்டுகளில் இருக்கிறது.

இந்தியாவிலேயே அதிக வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் முக்கியமானதாக தமிழ்நாட்டை கடந்த ஐந்து ஆண்டுகளில் கொண்டு வந்திருக்கிறோம். தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பட்டதால் வேலைவாய்ப்புகள் அதிகமாக கிடைத்திருக்கின்றன. குறிப்பாக 42 சதவிகிதம் பெண்கள் வேலைக்கு செல்லக்கூடிய மாநிலமாக தமிழ்நாடு இன்றைக்கு திமுக ஆட்சியிலே வளர்ந்திருக்கிறது.

அடுத்ததாக கல்வி. இதுவரை யார் யாருக்கெல்லாம் கல்வி விடுபட்டதோ ஒரு வழிகாட்டியாக இருந்து அவர்களையெல்லாம் அரவணைத்த திட்டங்கள் தான் நான் முதல்வன் போன்ற திட்டங்கள். இதனால் தமிழ்நாட்டில் இருந்து யுபிஎஸ்சி தேர்வுகளில் இவ்வளவு மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்ற சூழலை உருவாக்கி காட்டியிருக்கிறோம். உலகம் முழுக்க நமது மாணவர்கள் கல்வி கற்கச் செல்கிறார்கள்.

இப்படி கல்வி, வேலை வாய்ப்பு , அடிப்படை உள்கட்டமைப்பு என ஒரு முழுமையான வளர்ச்சியை தந்திருக்கக் கூடிய ஆட்சியாக கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியை நடத்தி இருக்கிறோம்.

தாயுமானவர் திட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள்... ரேஷன் பொருட்களை யார் யார் கடைக்கு சென்று வாங்க முடியவில்லை அவர்களுக்கு வீட்டுக்கே சென்று வழங்கக்கூடிய திட்டம். மக்களை தேடி மருத்துவம் என்ற வகையில் வீடு தேடிச் சென்று மருத்துவத்தையும் மருந்துகளையும் சேர்க்கும் திட்டம்.

இவ்வாறு எல்லாரையுமே அக்கறையோடு அரவணைத்து செல்லக்கூடிய ஆட்சியை முதலமைச்சர் அவர்கள் நடத்திக் காட்டி இருக்கிறார். அதனால் எல்லாருக்குமே பயனுள்ள ஆட்சியாக, எல்லாருக்கும் நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தரக்கூடிய ஆட்சியாக இந்த ஆட்சி இருந்திருக்கிறது.

இந்த ஆட்சி அடுத்த முறையும் வரவேண்டும், அப்போதுதான் வளர்ச்சிப் பாதை தொடரும் என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்” .

இவ்வாறு – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.